| | |
|---|---|
| Register Number | : 20113215 |
| Name of the Degree | : U.G |
| Course | : BACHELOR OF EDUCATION |
| Year | : 1. YEAR |
| Subject Title | : SOCIAL SCIENCE |
| Subject Code | : A1060 |
| Date | : 12. 8. 21 |
| No. of pages written | : 29 |
| Signature of the candidate | : R. Devi |

SECTION - B

3. Differentiate social science from social studies?

சமூகப் பாடமும், சமூக அறிவியலும்

* சமூக அறிவியலும் சமூகப் பாடமும் சமூகத்தைப் பற்றியதாக இருப்பினும், இரண்டும் வெவ்வேறுபட்ட பாடங்களாகும்.

* இரண்டு பாடங்களுமே மனிதன் இயற்கையுடன் கொண்ட உறவு முறைகளைப் பற்றியதாக இருப்பினும் ஆய்வுகள், கண்டுபிடிப்புகள், விசாரணைகள், சோதனைகள் இவற்றை கொண்டது.

* சமூக அறிவியல் பாடம், ஆரம்பக் கல்வி முதல் இடைநிலைக் கல்வி வரை அந்தந்த வகுப்புகளுக் -கேற்றவாறு தேர்வு செய்யப்பட்டு, பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு, கல்விக் கூடங்களில் கற்பிக்கப் -படுகின்றது.

* மாணவர்கள் நன்றாக புரிந்து கொண்டு கற்கும் விதமாக சமூக அறிவியல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

* சமூகப் அறிவியலைப் போன்றே சமூகப் பாடம் எழுதப்பட்டிருப்பினும், சமூகப் பாடம், இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்குக அதிகம் பயன்படுவதாக உள்ளது.

* சமூக அறிவியலில் உள்ள கருத்துகள் எளிமைப்படுத்தப்பட்டு அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் கருத்துகள் சமூகப் பாடத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.

* அடிப்படையில் சமூக அறிவியலும், சமூகப் பாடமும் ஒரே வகையானதே. சமூகப் பாடம் எளிமையானதல்ல.

* சமூக அறிவியலைச் சமூக பாடத்துடன் ஒப்பிடும் போது, சமூகப் பாடம் எளிமைப்படுத்தப் பட வேண்டும்.

* சமூக அறிவியல் பாடம் மனிதர்களின் நடைமுறை கோட்பாடுகளை கொண்டது.

* சமூகப் பாடம் ஆய்வு செய்து பெற்ற முடிவினை பற்றிப் படிப்பது.

* சமூக அறிவியல் பாடம் சமுதாயம், அசாரங்கள் அமைப்புகள் மனித சமூக வாழ்க்கையின் முன்னேற்றம் ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கிறது.

* சமூகப் பாடம் சற்றல் அனுபவத்தினை கொடுப்பதா-க உள்ளது. சமூக அறிவியல் பாடங்கள் இடைநிலை மாணவர்களுக்கு அதிக பலனை கொடுக்கவல்லது.

9. social science in modern age :-

நவீன காலத்திற்கு சமூக அறிவியலின் முக்கியத்துவம்:-

* காலத்தை புரிந்து கொள்வதற்கும் மாணவர்கள் எதிர் காலத்தில் சிறந்த குடிமகன்களாக உருவாக்கு-வதற்கும் சமூக அறிவியல் கல்வி தேவைப்படுகிறது.

* தற்காலத்தின் நிகழ்ச்சிகள் பற்றிய தெளிவான அறிவைப் பெறுவதுடன், எதிர் காலத்தின் முன்னேற்றத்-திற்கும் சமூக அறிவியலைப் படிப்பதால் அதிக வாய்ப்புகளை பெறுகின்றனர்.

* சமூக அறிவியலைக் கற்றலை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு சமூக முன்னேற்றத்தைப் பற்றியும் மாணவர்கள் நன்கு அறிந்து கொள்கின்றனர்.

* கடந்த கால நிகழ்வுகள் யாவும் சிறப்பான பொற்கால நிகழ்ச்சிகளாகும். கடந்த காலத்தைப் பற்றி மாணவர்கள் படிப்பதால் தங்கள் அறிவினைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

* தற்கால வரலாற்று நிகழ்ச்சிகள் இன்றைய அரசியலில் அடங்கும்.

* ஒவ்வொரு குடிமகனின் தேவைகளையும் உணர்த்துவதுடன், சமூக வாழ்க்கை செம்மையாக நடைபெறுவதற்கு ஒவ்வொரு மாணவனும் பாடுபட வேண்டும் என்ற உணர்வினைப் சமூக அறிவியல் ஏற்படுத்துகிறது.

8 utilization community resources :-

சமுதாய வளங்களை பயன்படுத்துதல் :-

* சமுதாய வளங்கள் என்பவை, வெளியிடங்களுக்கு மாணவர்களை ஆசிரியர் அழைத்துச் சென்று கற்பிக்கப் பயன்படுத்தும் நிலையங்கள், தொழிற்சாலைகள், சங்கங்கள், உள்ளிட்ட முக்கிய இடங்கள் அனைத்தும் ஆகும்.

சமுதாயத்திற்கும் பள்ளிக்கும் தொடர்பு :-

* மாணவன் எதிர்கால வாழ்க்கை முறைகளை கற்றுக் கொள்ள உதவும் ஆய்வுக்கூடம் என்றும் சமுதாயத்தைக் கூறலாம்.

* தனித்து ஒருவரும் வாழ முடியாது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு சமுதாய நல்வாழ்விற்குப் பாடுபட வேண்டும்.

* தனிமனிதன் சமூகத்துடன் இணைந்து மனித நல்வாழ்வுகள் மேம்படப் பாடுபட வேண்டியதன்

அவசியத்தை புரிந்து கொள்கிறான்

சமுதாய வளங்கள் :-

* இதனை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. இயற்கைத் தோற்றங்கள் (Physical Phenomenal):-

* இயற்கையில் காணப்படக்கூடிய மலைகள், மண் வகைகள், பாலைவனங்கள், காடுகள், ஏரிகள், விலங்குகள், பறவைகள், சரணாலயங்கள், சமுதாயத்திலுள்ள தொழிற்சாலைகள், சாலைவசதிகள், புத்தகங்கள், ஆறுகள், அணைக் கட்டுகள் போன்றவை மாணவர்கள் நேரில் சென்று காணக் கூடியவை.

2. சமூக நிலையங்கள் (Social institutions):-

* குடும்பம், தெரு, ஊர், கட்சிகள், சமுதாய நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தபால் தந்தி நிலையங்கள், தொடர்வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், நீதி மன்றங்கள், சங்கங்கள், வழிபாட்டு நிலையங்கள், நூலகங்கள், பொழுதுபோக்கு

திடங்கள், பழப்பகங்கள் முதலானவை அடங்கும்.

* இவற்றால் மாணவன் பெறக்கூடிய அறிவு அவனது வாழ்க்கைக்கான நல்லக் கருத்துகளை கற்றுக் கொடுக்கின்றது.

3. தொட்டறிய முடியாதவை (intangibles) :-

* பழக்க வழக்கங்கள், மரபு வழக்குகள், மனப் போக்குகள், நம்பிக்கைகள், கருத்துகள் ஆகியவையும் சமுதாய வளங்களைச் சேர்ந்தவையே ஆகும்.

11. Project method :-

* செயல்திட்ட முறை செயலை அடிப்படையாக கொண்டு கற்றலாகும். பயிற்றுவிக்கும் போது மேற்கொள்ளும் பயன் உள்ள செயல் செயல்திட்டமுறை.

வாழ்க்கைக்குப் பயனளிக்கும் ஒரு செயலை மாணவர்கள் தேர்ந்தெடுத்து அதனை முடிப்பதே

இதன் நோக்கம். இத்திட்டத்தை வகுத்து அதன் படி ஒரு செயலை செய்து முடிப்பதே செயல் திட்ட முறை.

செயல்திட்டமுறையில் நான்கு படிகள் :-

1. செயலை தேர்ந்தெடுத்தல்
2. திட்டம் வகுத்தல்
3. செய்து முடித்தல்
4. முடித்த வேலையை மதிப்பிடுதல்.

1. செயலை தேர்ந்தெடுத்தல் :-

* செயல்திட்டத்தை மாணவர்கள் ஒன்று கூடி ஆலோசித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் தங்களின் விருப்பப்படி தேர்ந்தெடுக்கலாம்.

2. வேலையை முடிக்கத் திட்டம் தீட்டுதல்

* தேர்ந்தெடுத்த செயலை எவ்விதம் முடிப்பது என்று மாணவர்களால் திட்டம் தீட்டப்பட வேண்டும்.

* மாணவர்களின் திறமை, பள்ளியில் உள்ள நுண்கலைக் கருவிகள் இவற்றை கருத்தில் கொண்டு செயலை செய்து முடிக்கும் வழிகளை திட்டமிட வேண்டும்.

3. செய்து முடித்தல்:-

* மேலே சொல்லப்பட்ட இரண்டு நிலைகளிலும் ஆசிரியர் வழிகாட்டியாக இருந்து தேவையான யோசனைகளைக் கூற வேண்டும்.

4. முடித்த வேலையை மதிப்பிடுதல்:-

* பயனுள்ள செயலை திட்டமிட்டபடி மாணவர்கள் செய்து முடித்தனர் என்று மாணவர்களை மதிப்பிடுதல் வேண்டும்.

அரசியல்:- பள்ளியின் விடுதியின் பரிபாலனத்தை ஏற்று நடத்தல் பள்ளியின் ஆண்டுமலர் இதழ் வெளியிடுதல், பள்ளியில் மாணவர் தலைவன் தேர்தல், சாலை பாதுகாப்பு விதிகளை புரிந்து கொள்ள செய்தல் போன்றவை.

வரலாற்றில் :- இந்தியா சுதந்திரம் அடைதல் ஐக்கிய நாட்டு நிறுவனம் போன்றவை.

புவியியலில் :- புவியியல் சிறப்புடைய இடங்களுக்கு கல்விப் பயணம். அண்மையில் உள்ள அணைக்கட்டு, கண்ணாடி, சிமெண்ட், தொழிற்சாலை இவற்றிற்கு சென்று வருதல், கால நிலை ஆராய்ச்சி, விண்மீன்கள் கிரகங்கள். இவற்றை பதிவு செய்தல்.

6. steps in Lesson plan :-

பாடத் திட்டத்தை அமைப்பதில் உள்ள படிகள் :-

அ. முன்னுரை

ஆ. பாட வளர்ச்சி

இ. கருத்துக்களை படிப்படியாக ஒப்பிட்டு இணைத்தல்

ஈ. பாடத்தை திருப்புதல்.

அ. முன்னுரை :-

* புதிதாக கற்றுக் கொடுக்கும் பாடத்திற்கு தொடர்பான முன்னறிவு அடிப்படை கருத்துகளை

மாணவர்கள் தெரிந்து கொண்டு உள்ளனர் என ஆசிரியர் அறிந்து கொள்ள சில வினாக்கள் கேட்க வேண்டும்.

* சார்பிக்கும் கருத்துகள் அனைத்தும் பாட நோக்கங்களை நிறைவிற்கு கொண்டு வரும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

* முன்னுரையில் மாணவர்களிடமிருந்து தெரிந்த கருத்துகளை வரையறுத்து பாட வளர்ச்சியில் தெரியாத கருத்திற்கு அவர்களை கொண்டு செல்லல்.

ஆ. பாடவளர்ச்சி :-

* முன்னுரையில் அறிமுகப்படுத்திய தலைப்பிற்கான கருத்துகளை படிப்படியாக முன்னேற்ற நிலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.

* பாட வளர்ச்சியின் போது வினாக் கேட்டல், விளக்குதல், பாட சம்பந்தமான பொருட்களை காட்டுதல் மாதிரிகள் என பல படிகள் அமைக்கப்பட வேண்டும்.

இ. கருத்துகளை ஒப்பிட்டு இணைத்தல் :-

* பாடவளர்ச்சி ஏறக்குறைய நாற்பது நிமிடங்கள் நிகழும். இதன் முடிவில் ஆசிரியர் இப்பாட வேளையில் நடத்திய கருத்துகளை நினைவு கூர்தல் மிக மிக அவசியம்.

* பாட வேளையின் கடைசி ஐந்து நிமிடத்தில் பாடத்தை திருப்புதல் என்ற படி அமைய வேண்டும்.

ஈ. பாடத்தை திருப்புதல் :-

* பாடத்தை கற்பித்த பிறகு பின் வினாக்கள் மூலம் பாடத்தில் கற்ற எல்லா கருத்துக்களையும் மீண்டும் தொகுத்து நினைவிற்கு கொண்டு வருதல் வேண்டும்.

4. Group directed instructional :-

குழு கற்பித்தல் முறை :-

⟹ அதிக அளவில் மாணவர்கள் கற்றலால் பயன் படவேண்டும். என்ற நோக்கில் 1975-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முறையாகும்.

⟹ திறமையான ஆசிரியர்கள் கொண்ட குழுவால் உயர்நிலை மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் முறையே குழு கற்பித்தல் எனப்படும்.

⟹ பாடப் பகுதியில் பொருத்தமான பகுதிகளை தேர்ந்தெடுத்து அவற்றில் திறனுடைய ஆசிரியர் குழுவின் மூலம் திட்டமிடல், முறைப்படுத்தல், கற்பித்தல், மதிப்பிடுதல் போன்ற செயல்களை நிகழ்த்தும் முறையே குழு கற்பித்தல் ஆகும்.

குழு கற்பித்தல் வகைகள் :-

1. ஒப்புவித்தல்
2. சொற்போர்
3. வல்லுனர் ஆய்வரங்கம்

4. கருத்தரங்கம்

5. பணிமனை

6. நடித்தல்

குழு அமைப்பு :-

⟹ குழு கற்பித்தலின் வகைக்கு ஏற்றதுபோல் குழுவை அமைத்துக் கொள்ள வேண்டும்.

⟹ மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றதுபோல் சிறு, சிறு குழுக்களாக பிரித்துக் கொள்ள வேண்டும்.

⟹ பாடப் பொருளுக்கேற்ப நேரத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.

⟹ குழு விவாதத்தில் ஆசிரியர் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டுமே, தவிர சர்வாதிகாரியாக மாறி தன்னுடைய கருத்துகளை மாணவர்கள் மீது திணிக்க கூடாது.

⟹ ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவரை மாணவர்களில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

12. Debate :- சொற்போர் :-

* உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் கூட்டும் வாய்மொழிப் பயிற்சி பெறுவதற்கு சொற்போர் சிறந்த தோர் சாதனம்.

* பல பொருள்களை பற்றி சொற்போர் நடைபெறும் போது மாணாக்கர் இருபிரிவாகப் பிரிந்து அணித் தலைவர்களின் கீழ் நான்கு நான்கு பேர்களாகவோ மூன்று மூன்று பேர்களாக அமைந்து பொருளை ஒட்டியும், வெட்டியும் பேசுவார்கள்.

* நடுவர் இருப்பர் அவர் அணித்தலைவருக்கு 5 மணித்துளிகளும் உறுப்பினர்களுக்கு 4 மணித்துளிகளும் வழங்கு தங்கள் கட்சிக்கான தொகுப்பை எடுத்துக் கூறுவர்.

* "பள்ளி பாராளுமன்றம்" பல சொற்போர்களுக்கு இதில் வாய்ப்பினை நல்கும்.

தீர்வுகள்

* நன்மையும், தீமையும் இணைந்ததாகு பொருள் பற்றிப் பேசியதிலிருந்து ஒரு முடிந்த தீர்மானத்துக்கு வரவியலாது.

* நாவன்மை மிகுந்த மாணாக்கர்கள் தகுந்த காரணங்களை கூறாமல் தங்கள் பேச்சாற்றலால் மறைத்தும் பக்கம் வாக்குகளைச் செய்யலாம்.

* அணித்தலைவர் வருபவர் – ஆசிரியர் மற்றும் மாற்றுக் கட்சியினரின் தெரிந்தத்தவறு -தலையே சாதித் தலைமுக்குச் செல்லாமல் அவையே ~~கூ~~ தாக்கி கை தட்டும் பெறுவார்கள்.

* தாக்கப்பட்டவர் இதனால் மனம் வருந்த வேண்டும்

13. Team teaching :-

அணிகளின் மூலம் கற்பித்தல்

* அணிகளின் மூலம் கற்பித்தல் என்பது மாணவர்களை எண்ணிக்கைக் கேற்ப இரண்டு (அ) நான்கு அணிகளாகப் பிரித்து கற்பித்தல்.

* அணி பிரிக்கும் முறை மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்டும் பிரிக்கலாம்.

* அதே போன்று மாணவர்களின் கற்கும் திறனைக் கண்டு அதற்கேற்றார் போல அணிகளை பிரித்தும் கற்பிக்கலாம்.

* ஒரு பாடப் பொருள் கற்பித்த பிறகு அதைப் பற்றிய அறிவினை சோதிப்பதற்காக அணிகளை பிரித்து பாடப் பொருளை மறந்து ஒரு செய்து மதிப்பிடப் பயன்படுத்தலாம்.

SECTION - A

1.

(b) Hardware and Software :-

* கல்வித் தொழில் நுட்பம் என்பது கல்வித் துறையில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கவல்லது.

* கல்வி முறைகளையும், விளைவுகளையும் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், மனித வளத்தையும் அறிவையும் பயன்படுத்தும் வழிமுறைகளையும் அறிவியல் அடிப்படையில் வகுக்கின்றது.

* கல்வித் தொழில் நுட்பம் என்பது மனித வளம் பொருள்கள் இவற்றுக்கிடையே நிகழும் தொடர்பு முறையை நெறிப்படுத்துகின்றது.

* அறிவியல் முறைப்படி நிகழும் கற்பித்தல் கற்றல் செய்முறையின் பகுதிகளான திட்டமிடுதல் செயல்படுத்துதல், மதிப்பிடுதல் போன்ற எல்லா -வற்றிலும் கல்வித் தொழில் நுட்பம் செயல்படுகிறது.

* பழைய கருத்துப்படி இது கோட்டுப் படங்கள், மாதிரிப் பொருள்கள் போன்றவற்றை குறித்து வந்தது.

* இயற்பியல் புரட்சியாலும், மின்னணுப் புரட்சி ஏற்பட்டதாலும் நவீன வன்கலன்களும் (Harwares) மென்கலன்களும் (Softwares) அடங்கிய ஒரு பகுதியாக கல்வித் தொழில் நுட்பம் உருவாகியுள்ளது.

* வகுப்பில் பாடம் கற்பிக்கும் போது, பேச்சு, வார்த்தைகள் ஆகியவற்றை ஆசிரியர் கூறியும் நம்பியிராமல் பாடக் கருத்துக்களை எடுத்துக் கூறிட இச்சாதனங்கள் உதவுகின்றன.

* சுற்றுப்பயணம் செல்லுதல், சோதனைகளை ஆய்வகத்தில் செய்து காட்டுதல் போன்ற செயல்கள் நேரடி அனுபவமுள்ள கல்விசார் செயல்கள் ஆகும்.

* பேசும் படம், பிலிம் சுருள் போன்றவற்றை கையாள ஓர் "ஒளிப்படக்காட்டி" தேவைப்படும்.

* வரைபடம், நிழலொளிப்படம் போன்றவற்றை கையாள எவ்விதக் கருவிகளும் தேவையில்லை.

* நேரடியாகவே பயன்படுத்த முடியும், இவ்வகைக் சாதனங்களால் பெறப்படும் அனுபவங்கள் காட்சியொளிச் சாதனங்கள் என்பதில் வகைப்படுத்தப் படும்.

* மின்காந்த நாடாக்கள் (அ) தட்டுகள் போன்றவை "கேட்பொலிச் சாதனங்கள் என்பதில் வகைப்படுத்தப்படும்.

* ஒலியொளிச் சாதனங்கள் என்ற தொடர் கருவிகளையும் அவற்றின் செயல்பாடுகளையும் சேர்த்தே குறிக்கும்.

2. relevant supporting devices of social science:

* கணிப்பொறியின் துணையால் வரலாறு கற்பது

ஒவ்வொரு மாணவரும் ஒரு கணிப்பொறி திரையின் முன் அமர்ந்திருப்பர். கணிப்பொறித் திரையுடன் கணிப்பொறி இணைக்கப்பட்டிருக்கும்.

* மாணவர் திரையுடன் இணைந்த தொலை தட்டச்சில் தனக்கு என்ன வரலாற்றுப் பாடம் வேண்டும் எனத் தட்டச்சு செய்து கட்டளையிடு-தல் வேண்டும்.

* கணிப்பொறியின் திரையில் மாணவர் விரும்பிய வரலாற்றுப் பாடக்கருத்து ஒரு கட்டத்தில் தோன்றும்.

* அனைத்து மாணவர் வாசித்து அதிலுள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

* கணிப்பொறியில் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு சரியான பதிலை மாணவர் சுட்டிக்காட்டவோ ஒருவகை மெல்லிய பேனாவால் திரையில் எழுதிக் காட்டவோ செய்ய வேண்டும்.

* மாணாக்கர்கள் கூட்டமாகவும், ஒரு-வருக்கொருவர் ஒத்துழைத்துக் கற்பதை வலியுறுத்துகிறது.

* தெரிய வேண்டிய செய்திகளை பாடப் பொருள் வடிவிலும் வரைபட முறையிலும், உயிரோட்டச் செயல்கள் வடிவில் தருகின்றது.

SECTION - C

15. Lesson plan :-

⟹ பாடத் திட்டம், கலைத்திட்டத்தின் சுருக்கமான வடிவம் ஆகும்.

⟹ கற்பிக்க வேண்டிய பாடப்பகுதிகள் தொகுத்து வழங்கப்பட்டு இருக்கும்.

⟹ பாடத்திட்டம் முதல் பருவ, இரண்டாம் பருவ, ஆண்டுத் தேர்வு எனத் தயார்க்கப்படுகிறது.

⟹ பாடத்திட்டம் கற்பிக்கும் காலத்தை வலியுறுத் -துகிறது.

⟹ பாடத்திட்டம் பல்வேறு தலைப்புகளின் தொகுப்பு.

20. observation method :-

* சோதனைக்கான மாணவர்களைப் பேட்டி கண்டும், உற்று நோக்கியும், நம்பகமாக இருக்கச் செய்ய வேண்டும்.

* இதில் மாணவர்களுக்குப் பல சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்து அச்சூழ்நிலைகளில் மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர். என்று கண்காணித்து வர வேண்டும்.

* பல ஆசிரியர்களும் மாணவர்களை ஒன்று கூறாக்கிச் செய்யப்பட்ட முடிவுகளை ஒப்பிட்டுப் பார்த்து பொது ~~நல்ல~~ முடிவிற்கும் வரலாம்.

17. Micro Teaching :-

* வகுப்பறைப் பயிற்சியில் பல புதுமையான கருத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. ~~அவற்றுள்~~ அவற்றுள் நுண்ணிலைக் கற்பித்தல் என்பதும் ஒன்றாகும்.

* நுண்ணிலைக் கற்பித்தலில் கற்பிக்கும் காலம் கற்பிக்கும் பாடப் பொருள், மாணவரின் எண்ணிக்கை ஆகியவை மிகக் குறைந்த அளவிலோ, எண்ணிக்கை மிகவோ இருக்கும்.

* நுண்ணிலை பயிற்சி என்பது ஒரு பயிற்சி முறையே தவிர கற்பிக்கும் முறை ஆகாது.

23. Stimulus and variation :-

* கற்பிக்கும் போது ஆசிரியர் ஒரே தொனியில் பேசினால் ஆர்வமின்மையும் சலிப்பும் மாணவர்களுக்கு ஏற்படும். ஆகவே, அந்த ஆசிரியர் இவ்வகைப் பேச்சுக்களையும், அசைவுகளையும் பயன்படுத்துகிறார்.

* ஒலியளவைக் கூறுகளை வேறுபாடுகப் படுத்துகிறார். பல்வேளைகளில், பெரும்பாலும் கரும் பலகையில் எழுதுகிறார்.

1. அசைவுகள்
2. சைகைகள்
3. பேச்சுதல்
4. கவனத்தை ஈர்த்தல்
5. கலந்துரையாடுதல் முறை
6. பேச்சு நிறுத்தம்

16. computer assisted instruction :-

* கணிப்பொறி வழிக் கற்பித்தல் நவீன கற்பிக்கும் முறைகளில் ஒன்று. மாணவர்கள் கணிப்பொறியை தனியாக இயக்குவதால் தனியாக பாடங்களை தாங்களே கற்றுக் கொள்ள இயலுகிறது.

* திட்டமிட்டு கற்பித்தலின் ஒரு வகை கணிப்பொறி வழிக் கற்பித்தல் முறை ஆகும்.

* இங்கு கணிப்பொறி கற்கும் ஊடகமாக திகழ்கிறது.

19. Diagnostic Test :-

* கல்வியை பொருத்தமட்டில் குறையறிவது என்பது கற்றலில் ஏற்படும் இடர்பாடுகளைக் கண்டறிந்து அதை நீக்குவதற்கு பயன்படுகிறது.

1. கற்றல் குறையுள்ள மாணவர்களை வகைப்படுத்துதல்

2. அவர்களது திறன்களின் எல்லையைக் கண்டு பிடித்தல்

3. இயலாமைக்கான காரணங்களை கண்டறிதல்

4. குறைதீர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

5. அதே குறைகள் மீண்டும் வராது தடுத்தல்

18. Social science library :-

* சமூக அறிவியல் கற்பித்தலுக்கு நூலகம் ஒரு திறவுகோல் போன்றது. வகுப்பறையில் கற்ற பாடப் பொருளை பற்றி அறிவை நூலகத்தின் மூலம் பெருக்கிக் கொள்ள முடியும்.

* சமூக அறிவியல் நூலகம் மாணவர்களுடைய தேவையை பூர்த்தி செய்வதுடன், ஆசிரியர்களுக்கு கற்பிக்கப்பட வேண்டிய கருத்துகளையும் கொடுக்கிறது.

* சமூக அறிவியல் கற்பித்தல் செயலின் தன்மையை அறிவதற்கு சமூக அறிவியல் பாட நூல்கள் எடுத்துக்காட்டாக அமைக்கப்பட வேண்டும்.

22. Community resources:-

* சமுதாய வளங்கள் என்பவை, வெளியிடங்களுக்கு மாணவர்களை ஆசிரியர் அழைத்து சென்று கற்பிக்கப் பயன்படுத்தும் நிலையங்கள், தொழிற்சாலைகள், தோட்டங்கள், உள்ளூரிலுள்ள முக்கிய இடங்கள் அனைத்து ஆகும்.

* மாணவன் எதிர்கால வாழ்க்கை முறைகளை கற்றுக் கொள்ள உதவும் ஆய்வுக் கூடம் என்றும் சமுதாயத்தை கூறலாம்.